



# ஹர ஹர சங்கரா



FREE COPY
January - 2026
Vol. 5 - ISSUE 03

# KODAMBAKKAM TIMES

# புரந்தரதாசர்

புரந்தரதாசர் கி.பி. 1480-ல் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஒன்பது கோடி சொத்துள்ள மிகப் பெரிய பணக்காரரின் மகன்.

கடைசியில் 80 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது கி.பி.1560-ல் அவர் அனைத்து சொத்துகளையும் தானம் செய்து விட்டார். செல்வம், செல்வம் என்று செருக்குடன் வாழ்ந்த அவரை விட்டு லட்சுமியானவள் "செல்வோம் .. செல்வோம் .." என்று போய் விட்டாள்.

ஆனால் அத்தனை பணமும் போன பின்புதான் அவருக்கு ஞானம் பிறந்தது.

கையில் ஒரு காசுகூட இல்லாத நிலையில் தான் அவர் மகாலட்சுமியை அழைத்தார்.

அதுவும் எப்படி? அற்புதமான ஸ்ரீராகத்தில் அழைத்தார். சிலர் அப்பாடலை மத்யமாவதி ராகத்திலும் பாடுவர்.

அந்தப் பாடலைப் பாடும் போதே கண்களில் நீர் பெருகும், மனம் மகிழ்ச்சியில் பொங்கும், நெஞ்சில் ஆனந்தம் தாண்டவமாடும், மெய் சிலிர்க்கும்.

**"பாக்யாத லக்ஷ்மி பாரம்மா ...**
**நம்மம்மா நீ செள பாக்யாத லக்ஷ்மி பாரம்மா..."**

மகாலட்சுமியை அவர் அழைக்கும் அழகே அழகு.

"சலங்கை கட்டிய கால்களினால் மெதுவாக அடியெடுத்து வைத்து, அந்த இனிமையான சலங்கை ஒலியால், உன்னை தஞ்சமடைந்து பூஜை செய்யும் பக்தர்களுக்கு தயிரிலிருந்து வரும் நறுமணமான வெண்ணெயைப் போல் வருவாய் தாயே" என்று கெஞ்சுகிறார் அந்த மகான்.

அவருடைய இயற்பெயர் ஸ்ரீனிவாச நாயக். அவர் வசித்த ஊரின் நாட்டாண்மையாகத் திகழ்ந்தார் அவர். மக்கள் அவரை செல்வத்தின் பொருட்டு நவகோடி நாராயண செட்டி என்றும் அழைத்தார்கள்.

அவ்வளவு பெரிய தனவந்தரான அவர் ஒரு கருமி. எச்சில் கையால்கூட காக்கையை விரட்ட மாட்டார் என்பது அவருடைய விஷயத்தில் நிஜம்.

ஸ்ரீனிவாச நாயக்கிற்கு பதினெட்டு வயதாகும் போது திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் சரஸ்வதி. அவள் இவருக்கு நேர் எதிரானவள். தானம், தர்மம் என்றால் கொள்ளைப் பிரியம். கடவுள் பக்தி மிகுந்தவள்.

அவர் வாழ்ந்த ஊரில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பாண்டுரங்கனாகக் காட்சியளித்தான். பெரிய கோவில். மக்கள் "பாண்டுரங்கா ... பாண்டுரங்கா" என்று பக்திப் பரவசத்தில் நாள் தோறும், வீதி தோறும் பஜனைப் பாடல்களை பாடிக் கொண்டே போவார்கள். ஆனால் ஸ்ரீனிவாச நாயக் கண்டு கொள்ளவே மாட்டார்.

பார்த்தான் பாண்டுரங்கன். ஒரு முதிய ஏழை அந்தணன் உருவில் ஏழு வயதுச் சிறுவனோடு ஸ்ரீனிவாச நாயக்கின் கடைமுன் வந்து நின்றான் இறைவன்.

"ஐயா ... தர்மப் பிரபுவே ..." ஸ்ரீனிவாச நாயக் அந்தப் பிராமணனை திரும்பிக் கூட பார்க்கவில்லை. விடுவானா இறைவன்? "ஐயா ... தர்மப் பிரபுவே ... சுவாமி..."

"டேய், யாருடா நீ?" அதட்டினார் ஸ்ரீனிவாச நாயக்.

"ஐயா ... நான் ஓர் ஏழைப் பிராமணன். இவன் என்னுடைய ஒரே மகன். ஏழு வயதாகிறது. உபநயனம் செய்ய வேண்டும். நீங்கள் உதவி செய்தால் இவனுக்கு பூணூல் போடலாம் .... பிரபு ... ஏதாவது கொஞ்சம் பணம் கொடுங்கள் .... சாமி...."



"போ .... போ ... வேறு எங்காவது போய் பிச்சை எடு. என்னிடம் பணமே இல்லை ...." விரட்டினார் ஸ்ரீனிவாச நாயக். எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் நாயக்கின் மனம் இளகவில்லை. ஆனால் பகவான் அவரை விடுவதாயில்லை.

தினந்தோறும் வந்து, நமக்கு படியளப் பவனே அவரிடம் பிச்சை கேட்டான். நாயக்கும் அலுக்காமல் விரட்டினார். ஒரு நாள், "உங்களிடம் யாசகம் வாங்காமல் போக மாட்டேன் பிரபு ..." என்று சொல்லி, இறைவன் நாயக்கின் கடை வாசலிலேயே உட்கார்ந்து விட்டான்.

"இது ஏதடா வம்பா போச்சே ..." என்று அலுத்துக் கொண்ட ஸ்ரீனிவாச நாயக், கல்லாப் பெட்டியிலிருந்து ஒரு செல்லாக் காசை எடுத்து அந்தணன் மேல் தூக்கி எறிந்தார். "இந்தா இதை எடுத்துப் போ. இனி மேல் கடைப்பக்கம் வராதே..."

அந்தக் காசைப் பார்த்து விட்டு, "பிரபு ... இது தேய்ந்து போயிருக்கிறதே ... எதற்கும் பிரயோஜனமில்லை. வேறு நல்ல காசு கொடுங்களேன் ..." என்றான் இறைவன். ஸ்ரீநிவாச நாயக் யோசித்தார்.

"நல்ல காசா? ஏதாவது பொருள் கொண்டு வந்து என் கடையில் அடமானம் வை ... நல்ல காசு தருகிறேன்" என்றார்.

அந்தணன் அந்தச் சிறுவனை அழைத்துக் கொண்டு நேராக ஸ்ரீனிவாச நாயக்கின் வீட்டிற்குச் சென்றான். அங்கே வெள்ளிக் கிழமையாதலால் துளசி பூஜையை முடித்து விட்டு ஸ்ரீநிவாச நாயக்கின் மனைவி சரஸ்வதி ஊஞ்சலில்

வந்து உட்கார்ந்தாள்.

"பவதி .... பிக்ஷாம் தேஹி...."

ஓடோடிச் சென்று வாசலில் பார்த்தாள். பார்த்ததும் காலில் விழுந்து கும்பிட்டாள். "என்ன வேண்டும் சுவாமி?" "அம்மா ... நான் ஓர் ஏழை வயதாகி விட்டது இவன் என் பையன். இவனுக்கு பூணூல் போட வேண்டும் கையில் பணமில்லை.

ஒரு கஞ்சனைக் கேட்டேன் அவன் மிகப் பெரிய பணக்காரன். ஆனால் சல்லிக்காசு கூட தர மாட்டேன் என்று என்னை அடிக்காத குறையாகத் துரத்தி விட்டான் அம்மா ....

உன்னைப் பார்த்தால் மகாலட்சுமி மாதிரி இருக்கிறாய். ஏதாவது உபகாரம் பண்ணம்மா ...."

"பணம் நம்மிடம் கிடையாது. அப்படியே இருந்து, தர்மம் செய்தேன் என்று தெரிந்தால் புருஷன் அடித்தே கொன்று விடுவான். இவருக்கு நாம் எப்படி உதவுவது?" என்று யோசித்த சரஸ்வதி முடிவில் தன்னுடைய பரிதாபமான நிலையை விளக்கினாள்.

"அட ... நீ என்னம்மா ... புருஷன் உனக்குக் கொடுத்ததை தர்மம் செய்தால் தானே ஆபத்து? திருமனத்தின் போது உன் பெற்றோர் போட்ட நகைகள் உன்னுடையதுதானே?

அதைக் கொடுத்தால் அவர் என்ன செய்ய முடியும்? என்று அவளை உசுப்பேற்றினான் பிராமணன்.

"அட உண்மைதானே? நம் வீட்டில் ஏராளமான நகைகள் போட்டார்களே எனக்கு? அவை அனைத்தும் என்னுடையவை தானே ... அதில் ஒன்றை தர்மம் செய்தால் என்ன?

சட்டென்று தன்னுடைய வைர மூக்குத்தியைக் கழட்டி அந்த பிராமணனிடம் கொடுத்து விட்டாள் சரஸ்வதி.

அவளை மனதார வாழ்த்தி விட்டு, அந்தச் சிறுவனுடன் நேரே ஸ்ரீநிவாச

SREE MANGALAGURU JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

நாயக்கின் அடகுக் கடைக்கே வந்தான் அந்த பிராமணன்.

ஸ்ரீநிவாச நாயக்கிற்கோ மறுபடியும் தொந்தரவு ஆரம்பித்து விட்டதோ என்று தோன்றியது. "இந்தாரும். இந்த மூக்குத்தியை எடுத்துக் கொண்டு ஏதாவது பணம் கொடும்'' என்று மிரட்டினான் பிராமணன்.

கையில் மூக்குத்தியை வாங்கி பரீட்சித்துப் பார்த்து, "இதை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே..." என்று யோசித்தார் நாயக்.

சிறிது நேரம் கழித்து, "ஓய் பிராமணரே ... இந்த மூக்குத்தி இங்கேயே இருக்கட்டும். இப்போது என்னிடம் காசு இல்லை நாளை வந்து பணம் வாங்கிக்கொள் ...." என்றார்.

அதை ஒப்புக்கொண்ட அந்தணன் போய் விட்டான். உடனே ஸ்ரீனிவாச நாயக் தன் கடையைப் பூட்டிவிட்டு நேரே வீட்டிற்குப் போனார். மனைவியைப் பார்த்த போது அவள் முகத்தில் மூக்குத்தியைக் காணவில்லை.

"சரஸ்வதி ... மூக்குத்தி எங்கே? இன்று வெள்ளிக்கிழமை. முகம் மூளியாய் இருக்கலாமா? அந்தப் பிராமணனுக்கு தானம் கொடுத்தேன் என்றால் கொன்று விடுவாரே?"

கடைசியில் சரஸ்வதி ஒரு முடிவுக்கு வந்தாள். "இந்தத் துஷ்டனிடம் மூர்க்கத்தனமாக அடி படுவதைவிட சாவதே மேல் ... " என்ற முடிவோடு, ஒரு பாத்திரத்தில் விஷத்தைக் கலந்து கையில் வைத்துக் கொண்டு துளசி மாடத்தை வலம் வந்தாள்.

"தாயே துளசி ... நான் உன்னிடம் வந்து விடுகிறேனம்மா? என்று சொல்லி விஷத்தைக் குடிக்க முற்படுகையில் - விஷப் பாத்திரத்தில் ஏதோ விழும் ஓசை கேட்டது. சரஸ்வதி உள்ளே கை விட்டுப் பார்த்த போது அவளின் மூக்குத்தி இருந்தது. அவளுக்கு ஆனந்தமும், வியப்புமாக இருந்தது. "என்னைக் காப்பாற்றி விட்டாய் தாயே" என்று கண்களில் நீர் பெருக விழுந்து கும்பிட்டாள்.... பிறகு, கணவனிடம் ஓடோடிச் சென்று, "இந்தாருங்கள் மூக்குத்தி..." என்று கொடுத்தாள்.

ஸ்ரீனிவாச நாயக்கிற்கு ஒன்றும் புரியவில்லை. மூக்குத்தியை எடுத்துக் கொண்டு பித்துப் பிடித்தவர் போல மீண்டும் தனது அடகுக் கடைக்குச் சென்றார். கல்லாப் பெட்டியைத் திறந்து உள்ளே பத்திரமாக வைத்திருந்த மூக்குத்தியைத் தேடினார்.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

அங்கே அது இல்லை. கடை முழுவதும் தேடினார். மூக்குத்தி கிடைக்கவில்லை. நாளை அந்த பிராமணன் வந்து "எனக்கு பணம் வேண்டாம் ... என்னுடைய நகையைக் கொடுங்கள் ...." என்று கேட்டால் என்ன செய்வது?

மனைவியினுடைய மூக்குத்தியையா அவனுக்கு கொடுப்பது? பிரமை பிடித்தது அவனுக்கு, கூடவே பயமும் வந்தது. மறுநாள் காலை.

கடை திறந்த சில வினாடிகளிலேயே அந்தக் கிழவன் சிறுவனோடு வந்து விட்டான். "ஐயா ... பிரபுவே ... நான் கொடுத்த நகைக்கு பணம் தருவதாகச் சொன்னீர்களே. இன்றும் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை. என்னுடைய நகையைக் கொடுங்கள். வேறு கடையில் அடமானம் வைத்துக் கொள்கிறேன்...." என்றான்.

ஸ்ரீனிவாச நாயக்கின் நிலை பரிதாபமானது. செருக்குடன் வாழ்ந்தவர் கிழவனிடம் கெஞ்சினார். "ஐயா ... மன்னித்து விடுங்கள். வெளியிலிருந்து கொஞ்சம் பணம் வர வேண்டியிருக்கிறது வந்தவுடன் தருகிறேன். முடிந்தால் மாலை வாருங்களேன். கண்டிப்பாக பணம் தருகிறேன்."

"சரி ... சரி ... சாயங்காலமும் என்னை ஏமாற்றி விடாதே நான் வருவேன் ..." கிழவன் போன பின்பு தன் கடையில் பணிபுரியும் ஒரு வேலையாளை அனுப்பி, அந்தக் கிழவன் எங்கே போகிறான் என்று கண்காணிக்கச் சொன்னார். அந்தக் கிழவனைப் பின் தொடர்ந்து சென்ற வேலையாள் சிறிது நேரம் கழித்து பதை பதைப்புடன் கடைக்கு ஓடி வந்தான்.

"என்னடா ... ஏன் இப்படி பயந்தாங்கொள்ளி மாதிரி ஓடி வருகிறாய்? கிழவன் உன்னை அடையாளம் தெரிந்து கொண்டு மிரட்டினானா?" "சுவாமி ... என்னை மன்னித்து விடுங்கள் ... கிழவர் இரண்டு மூன்று தெருக்கள் தாண்டி, பாண்டுரங்கன் கோவிலுக்குச் சென்றார் ... நேரே கர்ப்பக் கிரகத்துக்குள் புகுந்தார் ... பின்னர் மறைந்து விட்டார் ..." ஸ்ரீனிவாச நாயக் திடுக்கிட்டார். என்ன இது? கடைக்கு வந்த முதியவர் யார்? என்ன அதிசயம் இது.

கடையைப் பூட்டிக் கொண்டு வீட்டிற்கு வந்து மனைவியிடம் நடந்த சம்பவத்தைச் சொன்னார். அவளும் மூக்குத்தியை அந்தக் கிழவருக்கு தானம் தந்ததையும், அவர் வாழ்த்தி விட்டுப் போனதையும் சொன்னாள். ஸ்ரீனிவாசநாயக்கிற்கு புரிந்து விட்டது. கடவுளே தன்னை பரீட்சித்து விட்டதை உணர்ந்தார். அப்போது ஓர் அசரீரி பூஜை அறையிலிருந்து கேட்டது. "இத்தனை செல்வங்களை வைத்துக் கொண்டு தான தருமம் செய்யாமல் வாழ்கிறாயே? உனக்கு எப்படி நற்கதி கிடைக்கும்?

போ ... உன்னுடைய செல்வங்களை வைத்துக் கொண்டு தான, தருமம் செய்துவிட்டு புண்ணியம் தேடிக் கொள். இனி உன் பெயர் ஸ்ரீனிவாசநாயக் இல்லை. இந்த ஊரின் பெயரான புரந்தரகட என்கிற பெயரால் இனி உன் பெயர் புரந்தரதாசன். பகவானைப் பாடு. நீ நாரதருடைய அம்சம். ஸ்ரீகிருஷ்ண தேவராயருடைய குல குருவான ஸ்ரீ வியாசராயரை தஞ்சமடைவாயாக. அவர் உனக்கு குரு உபதேசம் செய்வார்..."

புரந்தரதாசன் ஸ்ரீனிவாசநாயக் தன்னுடைய அனைத்து சொத்துகளையும் ஏழை எளிய மக்களுக்கு தானம் செய்தார். ஒரு நொடியில் ஒன்பது கோடி ரூபாய் போயிற்று. ஓட்டாண்டியானார்.

தன் மனைவி, மக்களோடு இறைவன் நாமங்களைப் பாடியவாறே ஹம்பி சென்று

ஸ்ரீ வியாசராயரை சரணடைந்தார். அவர் ஸ்ரீனிவாச நாயக்கின் பிறப்பின் ரகசியத்தைச் சொல்லி அவருக்கு குரு உபதேசம் செய்தார். கால் நடையாகவே பாரத தேசத்தை மூன்று முறை வலம் வந்தார் புரந்தரதாசர். சுமார் நான்கு லட்சம் பாடல்களை இறைவன் மீது பாடினார்.


நம்முடைய திருவையாறு சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளுக்கு சிறு வயதில் அவருடைய அன்னை புரந்தரதாசரின் பதங்களையே சொல்லிக் கொடுத்தார்.

ஸ்வர வரிசை என்று சொல்லப்படுகிற "ஸ, ரி, க, ம, ப, த, நீ" என்கிற ஆரோகண அவரோகணங்களை சங்கீத உலகிற்குத் தந்த பிதாமகர் புரந்தரதாசரே. அவருடைய பதங்கள் இன்றும் நம் நாட்டுக் கச்சேரிகளில் பாடப்படுகின்றன. அப்படிப்பட்ட மகான் புரந்தரதாசர் கி.பி 1584-ல் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

---

# தேடி வந்த மாப்பிள்ளை

காஞ்சிப் பெரியவரைத் தரிசித்து சென்னை திரும்பிய அந்த ஓவியர் வீடு வந்தார். சாய்வு நாற்காலியில் சோர்வோடு அமர்ந்தார். அவர் மனைவி ஆவலோடு பெரியவாளை தரிசனம் செஞ்சேளா? 28 வயசாகியும் நம்ம பொண்ணுக்கு இன்னும் கல்யாணம் நடக்கவில்லை என்ற கவலையைச் சொன்னேளா? பொருளாதார பிரச்னை தான் நம்ம பெண் கல்யாணத்தைத் தாமதப் படுத்தறதுன்னு தெளிவாச் சொல்லச் சொன்னேனே? "பெரியவர் ஆசீர்வாதம் பண்ணினாப் போதும் நம்ம பெண் கல்யாணம் வெகுசீக்கிரம் நடந்துடும்".



மனைவிக்கு எந்த பதிலும் சொல்லாமல் அவர் அமைதிகாத்தார். அவருக்குச் சம்பளம் குறைவு. அன்றாடச் செலவுக்கே கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம். இதில் கல்யாணத்துக்கு பணம் சேர்ப்பது எப்படி?

மாப்பிள்ளை வீட்டார் கேட்கிற வரதட்சணையைப் பார்த்தால் மனம் மலைக்கிறது. வரதட்சணை வாங்கக் கூடாது என்று பெரியவர் ஓயாமல் சொன்னாலும் யார் கேட்கிறார்கள்?

ஓவியர் பெருமூச்சுடன், "நான் தரிசனம் பண்ண வரிசைல நின்னேன். எக்கச்சக்கக் கூட்டம். அவர் அருகே நான் வந்தப்போ என்னால எதுவுமே பேச முடியலே. அவர் திருமுகத்தையே பார்த்தபடி மனசுல நம் பிரச்சனையை நெனைச்சுப் பிரார்த்தனை பண்ணினேன். வாய்திறந்து சொல்லத்தான் நெனைச்சேன் அதுக்குள்ள பின்னாலிருந்து நகரச் சொல்லி நெருக்கினர். குங்குமப் பிரசாதத்தை வாங்கிண்டு வந்துட்டேன்.

இப்படி ஆயிடுத்தேன்னு மனசு கலங்கறது. மனைவி தன்னைக் கோவித்துக் கொள்ளப் போகிறாள் என்று அவர் நினைத்தார். ஆனால் மனைவியின் எண்ணம் வேறு மாதிரி இருந்தது.

"எதுக்கு வாய்விட்டுச் சொல்லணும்? மனசில் நெனைச்சுண்டாலே போதும். பகவான்னா அவர். பகவான் நம்மகிட்டப் பேசுறாரோ? ஆனால் நாம மனசுல வேண்டிண்டா நம்ம பிரார்த்தனையை நிறைவேத்தறார் இல்லையா? அது மாதிரிதான். சீக்கிரமே நல்லது நடக்கும்".

அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது யாரோ கதவைத் தட்டினர். ஓவியரின் மனைவி கதவைத் திறந்தார். கணவனும் மனைவியுமாக இருவர் வீட்டினுள் நுழைந்தார்கள்.

வந்தவர்கள் "நாங்க இதே வீதில குடிவந்து ஆறுமாசம் ஆச்சு. எங்க பையன் தினமும் உங்க பெண் போறப்போ வறப்போ பாத்திருக்கான். அவளோட அடக்கம் அவனைக் கவர்ந்திருக்கு. நீங்க சம்மதிச்சா உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறான். அவன் வரதட்சணை வாங்காம கல்யாணம் பண்ணிக்கறதுன்னு உறுதியா இருக்கான். கல்யாணத்தை எங்க செலவிலேயே நடத்துவோம். அவன் கிட்ட எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. நிறைய சம்பாதிக்கிறான். தான் நெனைச்ச மாதிரிப் பெண் தனக்கு மனைவியா அமைஞ்சா அவன் நம்பற ஒரே தெய்வமான பெரியவர்கிட்ட தம்பதி சமேதரா ஆசீர்வாதம் வாங்கிக்கணும்னு மட்டும் சொல்றான்", அவர் பேசிக்கொண்டே போனார்.

ஓவியரின் மனைவி அளவற்ற மகிழ்ச்சியோடு தன் கணவரைப் பார்த்தாள். அவர் விழிகளில் கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது.

---

# காசி ஸ்ரீ விஸ்வநாதருக்குக் குளிர்காலச் சட்டை

காசி ஸ்ரீ விஸ்வநாதருக்குக் குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டால் ஆனது) நகரத்துப் பெருமக்களின் பல்லாண்டுகளாகத் தொடரும் கைங்கரியம்.

காசியில் ஐப்பசி மாதம் முதல் மாசி மகாசிவராத்திரி வரை கடும் குளிர்காலம்.

நகரத்தார்களுக்குச் சிவபெருமானுடன் உள்ள பிணைப்பு தாய் குழந்தைக்குக் குளிரடித்தால் சேலை தலைப்பு கொண்டு போர்த்துவது போல் "காசி விஸ்வநாதருக்கு குளிரடிக்குதே என்று தோளில் துண்டு மட்டும் அணிந்து சட்டை இல்லாத நகரத்தார் அந்த காலங்களில் ஸ்ரீ விஸ்வநாதருக்கு "மக்மல் பட்டு" அணிவிக்க ஏற்பாடு செய்ததுமட்டுமல்லாது அதை நீடித்து கைங்கரியம் செய்ய கட்டளை ஏற்படுத்தி இன்றளவும் அவ்வாறே நடந்து வருகிறது. இதை தவிர ஏகாதசி நாளில் அல்வாவும், சோமவார உச்சி காலத்தில் பூரியும் நகரத்தார் நைவேத்திய உபயமாக உள்ளன.

"காசியை குறித்துச் செல்லும் கால்களே கால்களாகும்
காசியை வாழ்த்தும் நாவே நாவெனக் கூறலாகும்
காசியின் கதைகள் கேட்கும் செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும் கண்களே கண்களாகும்"

என்று கூறுகிறது கந்த புராணத்தில் "காசிக் காண்டம்" என்னும் பகுதியில் உள்ள ஒரு பாடல்.

அயோத்தியா, மதுரா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவாரகா ஆகியவற்றை மோட்ச புரி தலங்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வார்கள். மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவாரகா, அயோத்யா ஆகியவற்றை சைவ சப்த மோக்ஷ தாயகம் என்கிறது ஸ்லோகம்.

ராமஜன்ம பூமியான அயோத்யா, கிருஷ்ண பரமாத்மா பிறந்த பூமியான மதுரா, கங்கை விண்ணிலிருந்து பூமிக்குப் பிரவேசம் செய்யும் தலமாகிய மாயா எனப்படும் ஹரித்துவார், காசி என்ற புண்ணிய ஷேத்திரம், "நகரேஷு காஞ்சி" எனப் புகழப்படும் காஞ்சி மாநகர், அவந்திகா எனும் உஜ்ஜயினி மற்றும் கிருஷ்ண பரமாத்மா ஆண்டருளிய துவாரகா ஆகிய ஏழும் மோட்சபுரிகள் என்று குறிப்பிடப் பெறுகின்றன. இத்தலங்கள் பிறப்பது, வாழ்வது, இறப்பது என்ற மனித வாழ்க்கையின் ஆதி, நடு, அந்தம் என்ற மூன்று நிலைகளுக்கும் தலையாய இடங்கள் என்று கூறுகிறது புராணம்.

ஷேத்திரம் என்றால் நெல் விளையும் இடம் என்று பொருள். அவ்வாறு தூவப்படும் ஒரு நெல், பத்து நூறாகி, ஆயிரம் லட்சமாகி செழிக்கின்றதோ அவ்வாறு இத்தலங்களில் செய்யும் நற்காரியங்களும் ஒன்று பத்தாகி, நூறு ஆயிரமாகி, லட்சம் கோடியாகிப் பெருகி வாழ்வுக்கு நற்பயனை அளிக்கின்றன.

இந்த ஏழும் மோட்சபுரி ஷேத்திரங்களில் காசியைப் பற்றி பொதுவான செய்திகளை பார்ப்போம். காசி மாநகரம் வட இந்தியாவில் திரிவேணிசங்கமம் அமைந்திருக்கும் பிரயாக்ராஜிலிருந்து (அலகாபாத்) 120 கி.மீ. தொலைவில் உள்ளது. காசி என்ற சொல்லுக்கு "ஒளிமயமானது" என்று பொருள். இவ்வூருக்கு "வாரணாசி" என்று மற்றொரு பெயரும் உள்ளது. காசி நகருக்கு வடக்கே வாராணா என்ற நதியும், தெற்கே அசி எனும் நதியும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்த நகரமாதலால் "வாரணாசி" என்று பெயர் அமைந்தது இதனை "பூலோகக் கைலாசம்" என்று அழைப்பர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேஷங்களும் ஒருங்கே அமையப் பெற்றது காசி என்னும் புண்ணிய ஷேத்திரம். மூர்த்தி விசேஷம் பற்றி முதலில் காண்போம். மூர்த்தி : பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுள் முதலாவதாகக் கூறுவது காசி விஸ்வேஸ்வரர் எனும் விஸ்வநாதர் ஆகும். காசி விஸ்வநாதரை யாராக இருந்தாலும் அருகில் சென்று கைகளால் ஸ்பரிசித்து வணங்கும் பேற்றினைப் பெறலாம்.

விஸ்வநாதர் எளிமையின் வடிவம். அவரது திருவருள் சிறப்புமிகு குணம் ஆகும். காசியில் உள்ள விஸ்வநாதரைத் தொடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதாலோ என்னவோ "காசியில் வாழும் மனிதர்களைத் தொட்டாலே பிறவித் துன்பம் கிடையாது" என்று கூறுகிறது காசிக் காண்டம். ஜோதி லிங்கமான காசி விஸ்வநாதருக்கு மூன்று வேளையும் பூஜைப் பொருள்களை வழங்கி பூஜை செய்யும் பெருமை பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர்.

காசி நகரத்தார் சத்திரம் விஸ்வேசர் கோயிலுக்கு அருகேயுள்ள குடோலியா சந்நிதியை அடுத்து அமைந்த கட்டடமாகும். கடந்த 200 ஆண்டுகளாகச் செயல்படும் இந்நிறுவனம் பசு மடம், நந்தவனம் உண்டாக்கி விஸ்வநாதருக்கு பாலும், மலர்களும் வழங்குகிறது. வஷத் காலத்தில் "பத்தாஸ் மிட்டாய்" எனப்படும் இனிப்புப் பண்டம், உச்சிக் காலத்தில் பருப்புப் பொங்கல், அர்த்த சாமத்தில் சர்க்கரைப் பொங்கலும் நகரத்தார் சந்திரத்தில் இருந்து அனுப்பப்படும் பொருள்களைக் கொண்டு கோயில் மடப்பள்ளியில் செய்து நைவேத்யம்

செய்யப்படுகிறது.

தினமும் மூன்று முறை விஸ்வேஸ்வரருக்கான பூஜை, அபிஷேக, அலங்காரப் பொருள்களை நகரத்தார் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லும் போது மேள தாளம் ஒலிக்க "சம்போ சம்போ சங்கர மகாதேவா" என்று கோஷமிட்டுச் செல்வதை தெருக்களில் இருப்பவர்களும், கடைகளில் உள்ளவர்களும், கட்டடங்களில் வசிப்பவர்களும் மரியாதையுடன் சென்று பார்த்து தலை வணங்குவர்.

ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்த போதும் கூட "சம்போ" நேரப்படி தவறாமல் நடைபெறும் என்றும் பஞ்சாப் மெயில் தாமதமானாலும் கூட நகரத்தார் சம்போ நேரப்படி வந்து விடும் என்பதும் காசியில் பழமொழியாகவே வழக்கத்தில் சொல்வார்கள்.



காசியில் நகரத்தார் ஏற்படுத்தியுள்ள கட்டளைகள் : பால் கட்டளை, பசுமடக் கட்டளை, நந்தவனக் கட்டளை, வில்வம், அட்சதை, அருகம்புல் கட்டளை, புனுகு சட்டக் கட்டளை, கற்பூரக் கட்டளை, அத்தர் கட்டளை, விசாலாட்சி அம்பாள் திருப்பள்ளி எழுச்சிக் கட்டளை, விசாலாட்சி அம்பாள் பால் அபிஷேகக் கட்டளை, அன்னபூரணி அம்பாள் பால் அபிஷேகக் கட்டளை, உபதான அரிசிக் கட்டளை, (காப்பு அரிசி) சாதுக்கள் போஜன கட்டளை, பிராமண போஜன கட்டளை, சில்லறை பிராமண போஜன கட்டளை, வெள்ளி சாமான் நல்ல முறையில் பாதுகாக்கக் கட்டளை, சாதுக்கள் ஏழைகளுக்கு நித்தியபடி கட்டளை, சோமவாரக் கட்டளை, அன்னதானக் கட்டளை, நகரேஸ்வரர் கோவில் சிவலிங்க பிரதிஷ்டை கட்டளை, நெய்வேத்ய கட்டளை, வயிரவர் தீபக் கட்டளை, முக்தி மண்டப தீபக் கட்டளை, திருவனந்தல் கட்டளை, வில்வ ஆர கட்டளை, சாம்பிராணிக் கட்டளை, கங்கை அபிஷேகக் கட்டளை, அகண்ட தீபக் கட்டளை ஆகிய அனைத்து கட்டளைகளுக்கும் தனி, தனி நிரந்தர வைப்பு மூலம் வரவு, செலவு செய்யப்படுகிறது.

சத்திரத்தில் இருந்து விஸ்வநாதர் கோவிலுக்கு சம்போ கொண்டு செல்லும் அழகு பயம் கலந்த பக்தியோடு நடைபெறும் தினசரி இருவேளை நிகழ்வு ஆகும்.

சம்போவுக்குரிய பொருட்கள் அழகாக கட்டப்பட்டு, மூடி கொண்டு மூடப்பட்டும் தயாராக சத்திரத்து முதல் மாடியில் அலுவலகத்தில் உள்ள சுப்பிரமணியர் படத்துக்கு முன் வைக்கப்பட்டு சாம்பிராணி போடுவார்கள், பிறகு கீழே பாதாள ஈஸ்வரர் கோவிலில் இருந்து தசாங்கம் போட்டு கொண்டுவருவார்கள். உடனே நான்கு இந்துஸ்தானி பிராமணர்கள் நகரத்தார் சாமான்களைத் தூக்கி கொண்டு நாதஸ்வர கோஷ்டி உடன் செல்ல (வாசிப்பு இல்லை) "சம்போ சங்கரா" என்று உரத்த குரலில் சொல்லிக்கொண்டு கடைவீதி வழியாக செல்லும் போது வழியில் கடைக்காரர்கள் பொதுமக்கள் ஓரம் ஒதுங்கி, தலை வணங்கி, கை கூப்பி மரியாதை செய்வார்கள்.

விஸ்வநாதர் கோவிலில் இரண்டு நேரமும் நகரத்தார் பெயருக்கு அஷ்டோத்திர

அர்ச்சனை செய்ய நகரத்தார் நியமித்த அத்தியான குருக்கள் வந்து தயாராக இருப்பார்.

ஷெனாய் இசையே மங்கள இசையாக வாசிக்கப்படும். வடநாட்டுக் கோவில்களில் விஷ்வநாதர் கோவிலில் உச்சி காலம், அர்த்தஜாமம் இரண்டும் நகரத்தார்கள் ஏற்பாடு செய்துள்ள நாதஸ்வர இசையே வாசிக்கப்படும். கோவிலில் பாண்டாக்கள் எவ்வளவு கூட்டம் இருந்தாலும் நகரத்தார்களுக்கு முதல் மரியாதை செய்து ஆரத்தி செய்வார்கள்.

இன்றளவும் "சம்போ" பார்த்து வட நாட்டு கோடீஸ்வரர்களான பிர்லா போன்றோர் ஒரு நேரமாவது இந்த பூஜையை கைப்பற்றத் துடித்தார்கள். ஆனால் விஸ்வநாதர் அருளால் நீதிமன்றம் அனைத்தையும் தள்ளுபடி செய்து மூன்று கால பூஜை உரிமை நகரத்தார்களுடையதே என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

---

குரு சரணம் குரு நாதா சரணம்

# நலம் நல்கும் நவ கைலாயங்கள்

எங்கும் சிவம் எதிலும் சிவன் என்று வாழும் சிவ பக்தர்களின் உயரிய எண்ணமானது சிவனை கண்டு வணங்கி முக்தி எனும் இறுதி நிலையை அடைவதாகும். காஞ்சி, திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை போன்ற தலத்தில் உள்ள சிவனை முறையே பிறந்து, வாழ்ந்து, தரிசித்து, நினைத்தாலே முக்தி கிடைக்கும் என்பார்கள். நம்மிடையே உள்ள பல சிவாலயங்கள் நம் கர்ம வினைகளை களைந்து, மறு பிறப்பற்ற முக்தி நிலையை அடைவதற்கு வழி காட்டுகின்றன. இதன் படி முக்தியை தரும் நவ கைலாய தலங்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

இறைவனை அடைவதே வாழ்வின் உன்னதமான நிலையென்று நம் ஆன்றோர் மற்றும் சான்றோர்களும் கூறுவதுண்டு. கைலாய நாதனான சிவனை தரிசிக்கவும், முக்தி அடையவும் நவ கைலாய தலங்கள் (நவ என்றால் ஒன்பது என பொருள்) நமக்கு துணை செய்கின்றன. தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள 9 சிவாலயங்களே நவ கைலாயம் என்கிறார்கள். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அமைந்துள்ள இத்தலத்து சிவ பெருமானை வழிபட்டால் நம் வாழ்வின் இடர்களான பாவங்கள் அகன்று முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

நமக்கு முக்தியை நல்கும் நவ கைலாயங்கள் உருவன கதையைபார்ப்போம். அகத்தியரின் சீடர்களில் ஒருவரான உரோமச முனிவர் சிவனை நேரில் தரிசித்து அவர் மூலம் முக்தி அடைய விரும்பி தன் குருவை நாட அகத்திய முனிவர் தாமிரபரணி ஆற்றில் 9 தாமரை மலர்களை மிதக்க விட்டு அவைகள் எங்கு கரை சேர்கின்றதோ அந்த இடத்தில் நவகிரகங்களின் வரிசையில் சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டால் சிவனின் காட்சியும், முக்தியும் கிட்டும் என்றார். குருவின் கூற்றின் படி நடந்து 9 தாமரை மலர்கள் கரை ஒதுங்கிய இடங்களில் நீராடி உரோமச முனிவர் முக்தி பெற்றதாக சொல்லப்படுகிறது. அவர் அமைத்த ஒன்பது சிவ ஆலயங்களே நவ கைலாயங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றில் முதல் மூன்று தலங்கள் மேல் கைலாயம் என்றும், அடுத்த மூன்று தலங்கள் நடு கைலாயம் என்றும், கடைசி மூன்று தலங்கள் கீழ் கைலாயம் என்று அழைக்கப்படுகின்றன.

**அவைகளில் முதல் மூன்று தலங்கள் :**

1. சூரியன் - பாபநாசநாதர் கோவில் - பாபாநாசம்
2. சந்திரன் - சேரன்மாதேவி கைலாச நாதர் கோவில் - சேரன்மாதேவி
3. செவ்வாய் - கோடக நல்லூர் கைலாச நாதர் கோவில் - கோடக நல்லூர்.

**அடுத்த மூன்று தலங்கள்**

4. ராகு - குன்னத்தூர் கோத பரமேஸ்வரர் கோவில் - குன்னத்தூர்
5. குரு - முறப்பநாடு கைலாசநாதர் கோவில் - முறப்பநாடு
6. சனி - ஸ்ரீவைகுண்டம் கைலாசநாதர் கோவில் - ஸ்ரீவைகுண்டம்

**கடை மூன்று கீழ் கைலாய தலங்களான**

7. புதன் - தென் திருப்பேரை - கைலாசநாதர் கோவில் - தென் திருப்பேரை
8. கேது - ராஜபதி கைலாசநாதர் கோவில் - தென் திருப்பேரை
9. சுக்கிரன் - சேர்ந்த பூ மங்கலம் கைலாசநாதர் கோவில் - சேர்ந்த பூ மங்கலம்.

இவற்றுள் குன்னத்தூர் தவிர அனைத்து தல இறைவனும் கைலாசநாதர் என்ற நாமத்துடன் அருள் பாலித்து முக்தியை நல்குகிறார்கள். இத்தகைய சிறப்புடைய நவ கைலாய தலங்கள் அனைத்தையும் ஒரே நாளில் தரிசித்து விட முடியும். அகத்திய முனிவரின் வழி காட்டுதலின் படி அமையப் பெற்ற நவ கைலாய கோயில்களை வழிபட்டு முக்திக்கு வழி வகுப்போம்.

சிவனை சரண் அடைந்தோர் சிவலோகம் அடைவர் என்பது திண்ணம். சிவாய நமக.

........ ஹேமலதா கிருஷ்ணகுமார்

---

# திருப்பாவையில் திவ்ய தேசங்கள்

1. மார்கழித் திங்கள் - நாராயணனே நமக்கே பறை தருவான் - பரமபதம்

2. வையத்து-: பாற்கடலில் பையத் துயின்ற - க்ஷீராப்தி

3. ஓங்கி - ஓங்கி உலகளந்த உத்தமன் - திருக்கோவலூர்

4. ஆழிமழை - பாழியம் தோளுடை பத்மநாபன் - திரு அனந்தபுரம்

5. மாயனை - வடமதுரை மைந்தன் - மதுரா

6. புள்ளும் - வெள்ளத்ரவில் அமர்ந்த வித்து - திருவண் வண்டூர்

7. கீச்சு கீச்சு - கேசவனைப் பாடவும் - திருவாய்ப்பாடி

8. கீழ்வானம் - தேவாதி தேவனை சென்று நாம் சேவித்தால் - வரதராஜ பெருமாள் கோயில், காஞ்சி

9. தூமணி மாடம் - குன்றின்மேல் விளக்கு - திருக்கடிகை

10. நோற்று சுவர்க்கம் - நாற்றத் துழாய்முடி நாராயணன் - திருக்காட்கரை

11. கற்றுக் கறவை - முகில் வண்ணன் பேர் பாட - காளமேகப் பெருமாள் திருமோகூர்

12. கனைத்திளம் - தென் இலங்கை கோமானை சேற்ற மனத்துக்கு கினியான் - தில்லை திரு சித்திர கூட்டம்

13. புள்ளின்வாய் - பள்ளிக் கிடத்தியோ - திருக்குடந்தை

14. உங்கள் புழக்கடை - நாவுடையாய் - செந்தமிழும் வடுக்கலையும் திகழ்ந்த நாவர் - தேரழுந்தூர்

15. எல்லே - மாற்றாரை மாற்றழிக்க வல்லான் மாயன் - திருவல்லிக்கேணி

16. நாயகனாய் : மாயன் மணிவண்ணன் - திருக்குறுங்குடி

17. அம்பரமே - அம்பரமூடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான் - சீர்காழி

18. உந்து மத களிறு - பந்தார் விரலி மைத்துனன் - திருநறையூர்

19. குத்து விளக்கு - மலர்மார்பா - திருவிடவெந்தை

20. முப்பத்து மூவர் - செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலன் - திருப்பாடகம்

21. ஏற்ற கலங்கள் - ஊற்றமுடையாய் பெரியாய் - பெரும்புறக் கடல் - திருக்கண்ணமங்கை

22. அங்கண்மா ஞாலம் - அரசர் அபிமான பங்கமாய் வந்து தலைப்பெய்து - திருமாலிருஞ்சோலை

23. மாரி மலை முழஞ்சில் - பூவை பூ வண்ணா - திருவரங்கம்

24. அன்றிவ் உலகம் - குன்று குடையாய் - கோவர்த்தனம்

25. ஒருத்தி - கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமால் - திருக்கண்ணபுரம்

26. மாலே மணிவண்ணா - ஆலின் இலையாய் - பூரி ஜெகன்நாதர்

27. கூடாரை வெல்லும் - சீர் கோவிந்தா - திருவேங்கடம்

28. கற்றுக் கறவை - குறை ஒன்றுமில்லாத கோவிந்தா - விருந்தாவனம்

29. சிற்றம் சிறுகாலை - பறை கொள்வான் கோவிந்தா - துவாரகை

30. வங்கக் கடல் - அணிபுதுவை - ஸ்ரீவில்லிபுத்தூர்

---

# மகத்துவம் வாய்ந்த பரந்தாமனின் பன்னிரு நாமங்கள்

ஆயிரம் திருநாமங்களை பன்னிரெண்டு திருநாமங்களாக சுருக்கி பரந்தாமனின் பெருமைகளைக் கூறுவதுண்டு. எண்ணற்ற திருநாமங்களை உடைய பரந்தாமனின் ஆயிரம் திருநாமங்களை தொகுத்து பீஷ்மர், யுதிஷ்டிரனிடம் கூறியதுதான் விஷ்ணு சகஸ்ரநாமம். அந்த ஆயிரம் திருநாமங்களை பன்னிரெண்டு திருநாமங்களாக சுருக்கி பரந்தாமனின் பெருமைகளைக் கூறுவதுண்டு அதற்கு த்வாதச எனப் பெயர். வைணவர்கள் மிக முக்கியமாகக் கருதும் இப்பன்னிரெண்டு திருநாமங்கள் மிகவும் மகத்துவம் வாய்ந்தவை. அந்நாமங்களும் அவற்றின் விளக்கங்களும்.

1. கேசவ - துன்பத்தைத் தீர்ப்பவன்

2. நாராயண - உயிருக்கு ஆதாரமாக இருப்பவன்

3. மாதவ - திருமகள் மணாளனாக இருப்பவன்

4. கோவிந்த - பூமியைப் பிரளயத்திலிருந்து காத்தவன் (அ) பசுக்களை மேய்த்தவன்

5. விஷ்ணு - அனைத்துப் பொருள்களிலும் நிறைந்திருப்பவன்

6. மதுஸூதன - புலன்களாகிய இந்திரியங்களை ஈர்ப்பவன் (அ) மது என்னும் அரக்கனை வென்றவன்.

7. த்ரிவிக்ரம - மூன்றடிகளால் உலகங்களை அளந்தவன்

8. வாமன - குள்ளமான உருவம் உடையவன்

9. ஸ்ரீதர - ஸ்ரீயான திருமகளைத் தரிப்பவன்

10. ஹ்ருஷீகேச - தன் ஆணைப்படி புலன்களை நடத்துபவன்

11. பத்மநாப - தனது நாபியிலே தாமரையை உடையவன்

12. தாமோதரன் - உரலில் கயிற்றால் கட்டப்பட்ட அடையாளம் கொண்ட வயிறு உடையவன்.

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

**HAPPY NEW YEAR 2026**

&

HAPPY Pongal



## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181

# இனிய புத்தாண்டு
மற்றும்
# பொங்கல் திருநாள்
நல்வாழ்த்துக்கள் !

மயிலாப்பூர்
## கணபதிஸ்
®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

**பாரம்பரியமாக 1942 முதல்**

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com




ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com